பத்திரிகை சுதந்திரம் என்பது மிக முக்கியமானது. ஆனால், அவை நடவடிக்கைகளில் இடம்பெறாத ஒரு நிகழ்ச்சியைப் பத்திரிகையில் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் வெளியிட்டிருப்பது சட்டமன்ற மரபுக்கு மாறானதாகும். ஜனநாயக அமைப்பில் சட்டமன்றத்திற்குள்ள மிக முக்கியமான ஆளுமையையும், நீதிமன்றத்திற்கு உள்ள தனித் தன்மையையும் நாம் அனைவரும் அறிவோம். இதில் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படுகின்ற பத்திரிகைகள், மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. சில பத்திரிகைகள் அவையின் கண்ணியத்தையும் மதிப்பையும் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. பத்திரிகைகள் இதுபோன்று செய்திகள் வெளியிடுமானால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, முதல்வர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, இனிமேல் இப்பத்திரிகைகள் நடுநிலையுடன் விருப்பு வெறுப்பின்றி உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு உணர்த்தும்வகையில் செய்திகள் வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2006 ஆகஸ்ட் 4] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10—50

(ஆ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.